2002 மே 7]

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, பேரூராட்சி நிருவாகம் அதனைச் செயல்படுத்துவதற்கு முன்வரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 296, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

296—

குடிநீர் வசதி

***18632—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த மூன்றாண்டுகளாக மதுரை மேற்குத் தொகுதியிலுள்ள மேலப்பொன்னகரம், சண்முகநாதபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை மாநகராட்சி எடுத்த நடவடிக்கையின் மூலமாகக் கழிவுநீர் குடிநீருடன் கலப்பது தவிர்க்கப்பட்டு, மேலப்பொன்னகரம், சண்முகநாதபுரம் மற்றும் சுற்று வட்டாரங்களில் தற்பொழுது சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை எழுப்பியபொழுது குடி தண்ணீரில் சாக்கடை கலந்து வந்தது. இப்போது அதிகாரிகள் சரி செய்துவிட்டதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மதுரை மேற்குத் தொகுதியைப் பொறுத்தவரையில், கடந்த மூன்று ஆண்டுகளாகவே திடீரென்று குடி தண்ணீரிலே சாக்கடை கலப்பதும், அதை அதிகாரிகள் சரி செய்வதும், தற்காலிக முடிவை அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுப்பதும்

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தக் குடி தண்ணீர் குழாயினுடைய ஓட்டையை அடைப்பதற்கு அதிகாரிகள் சைக்கிள் tube-ஐப் பயன்படுத்துவதாகப் பொதுமக்கள் என்னிடம் எடுத்துச் சொன்னார்கள். அந்த குடி தண்ணீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், அந்தக் குழாய்கள் இரும்புக் குழாய்களாக இருப்பதனால் துருப்பிடித்து அடிக்கடி ஓட்டை விழுவதாலும், 40 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட அந்தப் பழைய குழாய்களை எடுத்துவிட்டு, புதிய பி.வி.சி குழாய்களைப் பதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, மீண்டும் குடி தண்ணீரிலே சாக்கடை கலக்காமல் தடுப்பதற்கு நிரந்தரமான முடிவை எடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி நிர்வாகத்திற்கு இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்படிப்பட்ட 40 ஆண்டு காலம், 50 ஆண்டு காலத்திற்கு மேல் உள்ள பழைய குழாய்களில் பழுது ஏற்பட்டு அல்லது துவாரம் விழுந்து இருந்தால், அதைச் சரி செய்வதற்கு மாநகராட்சி நிர்வாகத்திற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி நிர்வாகத்தைக் கேட்டு, அவர்களுக்குத் தகுந்த ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 297, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS